ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/10 - 2016 නොවැම්බර් මස 08 වැනි අඟහරුවාදා - 2016.11.08

*1992/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டம்***

*3 (2) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணி (பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், அமைச்சரவையின் எழுத்து மூல முன் அங்கீகாரம், காணி அமைச்சின் மதியுரை என்பனவற்றுடன், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நியதிகளிலுள்ளவாறு, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என்ற வகையில் அடையாளம் காணப்பட்டுள்ள, கொழும்பு 03, ஆர். ஏ. டி. மெல் மாவத்தையில் 418,420 மற்றும் 422 ஆம் இலக்கங்களில் அமைந்துள்ள, அடுக்குமாடி கட்டிடத் தொகுதி ஒரு கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் என்ற வகையில், உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றில் ஈடுபட்டுள்ள, அவிக் இன்டர்நெஷனல் ஹொடெல்ஸ் லங்கா லிமிடெட் இனை, கொழும்பு 03, ஆர். ஏ. டி. மெல் மாவத்தையில், மதிப்பீட்டு இலக்கம் 418 இனைக் கொண்ட, உரிமம் பெற்ற நில அளவையாளர், காமினி பீ. தொடன்வெல அவர்களினால் தயாரிக்கப்பட்ட, 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 3 ஆந் திகதிய, 4839 ஆம் இலக்க, வரைபடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு, துண்டு ஏ என அடையாளப்படுத்தப்பட்ட காணி 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, நவெம்பர் 08.*

*11- 1054*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.